**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.85
https://ngmtamil.in/

# பண்டையத் தமிழரின் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் அ. பீட்டர் ராஜ்,**

இணைப் பேராசிரியர், பிஷப் அம்புரோஸ் கல்லூரி(தன்னாட்சி)

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் எக்காலத்திற்கும் பெருந்தும் உயர்ந்தப் பண்பாட்டு நெறிஇஃஸ் விழுமிய நெறிகளைத் தன்னகத்தேக் கொண்டுள்ளது. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடன் செம்மாந்த நெறிகள் பலவற்றைத் தங்கள் வாழ்வில் கடைபிடித்தது பண்டையத் தமிழர்கள் வாழ்ந்தனர். இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி என்ற விதத்தில் பண்டையத்தமிழ் இலக்கியங்கள் வாயிலாகப் பண்டையத்தமிழர்கள் எத்தகைய வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தனர். என்பது குறித்து அறியும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** வாழ்வியல் – Humanlife, நன்னெறிகள் – Ethics, விழுமியங்கள் – Values, பண்பாடு – Culture, மனித நேயம் – Humanity, மானம் - Sense of Shame, வீரம் - Valour

**ஆய்வு முன்னுரை**

இலக்கியம் என்பது மனிதனால் உருவாக்கப்படுகின்ற ஒருகலைப்படைப்பாகும். சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையும் நாம் இலக்கியங்கள் வாயிலாகவே அறிந்து கொள்கிறோம். " இலக்கியம் ஒரு சமுதாயத்தின் கடந்த கால அமைப்பையும் நிலையையும் அறிந்து கொள்ள உதவுகின்ற கருவி "1 என்ற கூற்றின் மூலம் உணரலாம். மேலும் மனித வாழ்வைச் சீர்ப்படுத்திச் செம்மையாக்கம் செய்யும் கருவியாகத்திகழ்கிறது. சக மனிதனை நேசித்து வாழ்வதற்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. அவ்வகையில் செம்மாந்த நெறிகளைக் கொண்டுள்ள பண்டையத் தமிழ் இலக்கியங்கள் வழி பண்டையத் தமிழர்கள் தங்கள் வாழ்வில் கடை பிடித்த வாழ்வியல் நெறிகளான மானுட நேயம்/ கல்வியே அறிவின் திறவுகோல்/ வறியோர்க்கு உதவுதல்/ மானவாழ்வே வாழ்வு/ செய்ந்நன்றி மறவாமை/ வீரவாழ்வை விரும்புதல் போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**வாழ்வியல் நெறிகள் விளக்கம்**

ஒரு மனிதன் தன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும்/ மகிழ்ச்சியாகவும் ஒழுக்கமாகவும்/ செம்மாந்த நெறியிலும் வாழ்வதற்காக வழிகாட்டும் வழிமுறைகளை வாழ்வியலில் நெறிகள் என்கிறோம். அவ்வகையில் கீழ்க்கண்ட நன்னெறிகளை பண்டையத் தமிழர்கள் வாழ்வாகக் கொண்டனர்.

**மானுடநேயம்**

ஒரு மனிதன் சக மனிதன் மீது கொள்கிற செலுத்துகிற/ அன்பு/ கருணை/ இரக்கம்/ பாசம் இவற்றோடு அனைத்து உயிர்களையும் ஒன்றாகக் கருதும் உயர்ந்த உள்ளத்தை மானுட நேயமாகக் கொள்ளலாம். பண்டையத்தமிழர்கள் தங்கள் வாழ்வில் எல்லா நிலைகளிலும் மானுட நேயத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்ததை நாம் அறிய முடிகிறது. மானுட நேயத்தை வெறும் சொல்லளவில் அல்லாமல்/ அவர்களின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தினார். சாதி/ மதம் என்ற எல்லைகளைக் கடந்து அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டும் நெறியினை பண்டையத் தமிழர்கள் தங்கள் வாழ்வில் கடைபிடித்து வாழ்ந்தனர். பிறப்பால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் முறையின்றி வாழ்ந்தனர்.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமையான் " 2

என்கிறது வள்ளுவம்

" யாதும் ஊரே யாவரும் கேளிர் " 3

என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றுப்படி உலகிலுள்ள எல்லா ஊர்களும் என் சொந்த ஊரே/ உலகமே என் வீடு அனைத்து மக்களும் என் உறவினர்கள் என்ற அளவில் குறுகிய எல்லைகளைக் கடந்து எல்லோரும் நம்மைப் போன்றவர்கள் என்ற உலகளாவிய ஒருமைப்பாட்டுச் சிந்தனை பண்டையத் தமிழர்களிடம் நிலைபெற்றிருந்ததை நாம் காணலாம். தன்னலம் விடுத்து பிறர் நலம் பேணும் நல்லியல்பு கொண்டவர்களாக அவர்கள் வாழ்ந்தனர். இதனை

" தமக்கென முயலா நோன்தாள்பிறர்க்கென

முயலனர் உண்மை யானே "4

என்ற புறநானூறு பாடல் புலப்படுத்துகிறது.

பிறருக்காக வாழ்வதில் பண்டையத்தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மனித நேயத்திற்கு முரணான எந்தச் செயலையும் செய்வதற்கு பண்டையத் தமிழர்கள் விரும்பியதில்லை. ஒருவர் மற்றவருக்கு எந்த நன்மையும் செய்ய இயலவில்லை என்றால் கூட பரவாயில்லை. ஆனால் யாரும் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது பிறருக்குத் தீமை செய்யாதிருத்தலே அறம். அதுவே மக்கள் அனைவரும் விரும்பும் நற்பண்பாகும். என்ற கோட்பாட்டை வாழ்வில் கொண்டிருந்தனர். இதனை

" பல் சான்றீரே பல் சான்றீரே………………………………………………………………

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான் எல்லோரும் உவப்பது அன்றியுமநல்லாற்றுப் படூஉம் நெறியுமாமார் அதுவே (5)

என்ற புறநானூற்றுப் பாடல் வழி பண்டையத் தமிழரின் மனித நேயப் பண்பு புலப்படுகிறது.

**கல்வியே அறிவின் திறவுகோல்**

ஒரு மனிதனை பண்புள்ளவனாக/ அறிவுள்ளவனாக மாற்றுவது கல்வியே என்பதை பண்டையத் தமிழர்கள் அறிந்திருந்தனர். எனவே கல்விக்கு மிகவும் முக்கியம் கொடுத்தனர். கல்வியே அறிவின் திறவுகோல் என நம்பினர். கற்றோரை மிகவும் மதித்தனர். போற்றினர். பொருள் கொடுத்தாவது கல்வியைக் கற்க வேண்டும் என்று விரும்பினர். பிச்சை எடுப்பது மிகவும் இழிவான செயல் என்பதை பண்டையத் தமிழர்கள் தெரிந்திருந்த போதிலும் பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும். மானம் இழந்தாலும்/ பரவாயில்லை. கல்வி கற்றலே அதனினும் உயர்ந்தது. என்ற கூற்றின் மூலம் பண்டையத் தமிழர்கள் கல்வியையும்/ அறிவுடையவர்களையும் எந்தளவிற்கு உயர்வாக கருதினர் என்பது புலனாகிறது. இதனை

" கற்றை நன்றே கற்கை நன்றேபிச்சை புகினும் கற்கை நன்றே "6

என்ற வரிகள் மூலம் பிறரிடம் கையேந்திப் பொருளாவது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். புகழைத்தருவது கல்வி ஒன்றே என்பதை அதிவீரராம பாண்டியர் பாடல் புலப்படுத்துகிறது. மேலும் கல்வியின் மேன்மையையும் கற்றோர்களின் உயர்வையும் கூறும் பொழுது

" உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்பிள்ளை நிலை முனியாது கற்றல் நன்றே.............................................................அவன் கண் படுமே " 7

என்ற புறப்பாடல் வழி பொருள் கொடுத்தாவது கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தாலும் கற்றோரையே அனைவரும் மதிப்பார் என்ற கூற்றின் மூலம் கல்வியின் சிறப்பு உணர்த்தப்படுகிறது. கற்றோரின் சிறப்பை ஔவையார் கூறும் பொழுது மன்னனுக்குத் தன் தேசத்தில் மட்டுமே சிறப்பிருக்கும்/ மதிப்பிருக்கும் ஆனால் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என கல்வியின் பெருமையை

" மன்னனும் மாசரக் கற்றோனும் சீர்தூக்கின்மன்னனில் கற்றோன் சிறப்புடையன் மன்னற்குத்தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்சென்ற இடமெல்லாம் சிறப்பு "8

என்பதன் மூலம் அறியலாம்.

" யாண்டு பலவாக நரையில ஆகுதல்....................................................சான்றோர் பலர்யான் வாழும் ஊரே "9

எனத் தங்கள் ஊரில் உயர் கொள்கைக்காக உயிர் வாழும் அறிஞர் பெருமக்கள் பலர் வாழ்வதால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். கற்றோர் பலர் இருப்பதால் எனக்கு தலைமுடி நரைப்பதில்லை எனக் கல்வியின் பெருமையை பிசிராந்தையாரிடம் கோப்பெருஞ்சோழன் கூறுகிறார்.

**வறியோர்க்கு உதவுதல்**

பண்டையத் தமிழர்கள் வறியோர்க்கு ஈவதை/ உதவுவதை அறத்தின் ஒரு பகுதியாகக் கருதினர். அன்பு/ அறம்/ இரக்கம் போன்றவற்றின் வடிவமாகப் பார்த்தனர்.

" வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்குறிஎதிர்ப்பை நீர துடைத்து "10

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப பெரியவர்க்கு ஈவதில் மகிழ்ந்தனர். எத்தகைய பொருள் நிலையும் இன்றி வறுமை நிலையில் இருப்பவர்களுக்குத் தன்னிடமுள்ள பொருட்களைப் பகிர்ந்தளிப்பதை தங்கள் கொள்கையாகவே கொண்டிருந்தனர். கைமாறு கருதாமல் உதவிக்கரம் தேடி வந்த ஏழைகளுக்குக் கொடுத்து உதவினர்.

மன்னர்கள் தங்களை நாடி வருகின்ற புலவர்களுக்குக் கொடை அளித்ததோடு மட்டுமன்றி வறியோர்களுக்கும் உதவி செய்கின்ற வள்ளல் தன்மை கொண்டவர்களாக விளங்கினர். பிறரின் துன்பம் துடைக்கும் அறமாக பண்டையத் தமிழர்கள் இதனைக் கருதினர் என்பதை பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. தேடிய செல்வம் எல்லாம் தனக்கே என எண்ணாமல் பிறருக்கும் தந்து மகிழ்வதற்கே என்பதை உணர்ந்து வாழவேண்டுமென்பதை நக்கீரர் பாடல் உணர்த்துகிறது.

" பிறவும் எல்லாம் ஓர்ஒக்குமேசெல்வத்துப் பயனே ஈதல்துய்ப்போம் எனினே தப்புந பலவே "11

என்ற வரிகள் மூலம் பிறருக்கு உதவும் பண்பை காணமுடிகிறது.

மேலும் ஈதலின் சிறப்பை கழாஅத்தலையார் கூறும் பொழுது/ ஒருவன் பிறரிடம் சென்று தா என்று கேட்பது இழிவுடையது. கேட்பவனுக்கு இல்லை தரமாட்டேன் என்பதுஅதை விட இழிவானது. ஒருவன் என்று கேட்பதற்கு முன்பாகவே குறிப்பறிந்து கொடுத்து உதவுவதே உயர்ந்த செயல் கொடுக்கும் பொழுது வேண்டாமென்பது அதைவிட உயர்வானது என்பதை

" ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்றுகொள் எனக் கொடுத்தல் உயர்ந்தது அன்றதன் எதிர்கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று " 12

என்ற பாடல் ஈகையின் திறத்தை விளக்குகிறது.

" நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாமஉணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே "13

என்ற புறநானூறு பாடல் வரிகளின் மூலம் நீரினறி வாழ முடியாது போல உணவின்றியும் மனிதன் வாழ முடியாது. எனவே உடலில் பசி நீங்க உணவு/ கொடுப்பவர்கள் உயிர் கொடுப்பதற்குச் சமம் என வறியோர்க்கு உணவு கொடுப்பதன் சிறப்பை புலவியனார் என்னும் புலவர் மூலம் அறியலாம்.

சோழன் நலங்கிள்ளி என்ற மன்னன் வறுமையில் தன்னை நாடி வருபவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உணவளித்ததை

" வல்லாராயினும் வல்லுநர் ஆயினும்வருந்தி வந்தோர் மருங்கு நோக்கிஅருள் வல்லியை ஆகுமதி அருளிலர் " 14

என்ற பாடல் விளக்குகிறது.

**மான வாழ்வே வாழ்வு**

பண்டையத் தமிழர்கள் மானத்தை உயிரினும் மேலாகக் கருதினர். உயிர் துறக்க நேரினும் மானத்தை இழக்கக் கூடாது என்பது பழந்தமிழர்களின் கொள்கையாகும். மானம் அழிவதைக் காட்டிலும் உயிரை விடுவதே மேல் என்ற வாழ்வியல் நெறியினைக் கொண்டிருந்தனர். அறத்தின் வழி நின்று வாழும் ஒழுக்க நெறிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

பண்டையத் தமிழர்கள் வறுமையில் வாடினாலும் அது குறித்து கவலைப்படவில்லை. ஆனால் பிறர் மதிக்கும் படி தன்மானத்தோடு வாழவே விரும்பினர். ஏதேனும் பழிச்சொல் வந்தால் உயிர் வாழ்வதை விரும்பாதவர்களாக வாழ்ந்தனர்.

" மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்உயிர் நீப்பர் மானம் வரின் " 15.

என்ற குறளுக்கு முன்னுதாரணமாய் திகழ்ந்தனர்.

பழந்தமிழரின் மானத்தை கணியன் பூங்குன்றனார்.

" புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்வு இலர் " 16

பண்டையத் தமிழரின் புகழ் பெறுவதற்காக தங்கள் உயிரையும் கொடுப்பவர்களாக இருந்தனர். அதே சமயம் பழி/ இழிவான செயல் என்றால் அதற்கு விலையாக/ பரிசாக உலகமே கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளாத/ உயிர் பண்பினைக் கொண்டிருந்ததை புறநூற்று பாடல் புலப்படுத்துகிறது.

மேலும் மான உணர்வு மிக்கவர்களாக பழந்தமிழர்கள் இருந்ததையும்/ தன்நிலை மாறாமல் தன்மானத்துடன் வாழவிரும்பியதையும் நாம் பெருஞ்சித்திரனார் பாடல் வரி காண முடிகிறது. தன்னை மதிக்காமல் மன்னன் இளவிச்சிக்கோ பரிசில் தரக்காலம் நீட்டியதைப் பொறுக்காமல் தன்னுடைய மான உணர்ச்சியை வெளிப்படுத்தினார். மதியாது தரும் பொருள் எமக்குத் தேவையில்லை என்பதை

" முற்றிய திருவின் மூவர் ஆயினும்பெட்பின்றி ஈதல் யாம் வேண்டேம்......................................................

ஒளிரு மறுப்பு ஏந்திய செம்மத்களிறின்று பெயர பரிசீலக் கடும் பே"17

என்ற பாடல் வரி புகழ் மிக்க மூவேந்தர்களானாலும் தன்னை மதியாது தரும் கொடையை ஏற்க மாட்டேன் என்ற பெருந்தலைச் சாத்தனாரின் கூற்று மானத்தின் மேன்மையை புலப்படுத்துகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் தரு காலம் தாழ்த்திய போது ஔவையார் தன் தகுதி அறியாதவனா/ இல்லை தரம் உணராதவனா/ இவ்வுலகம் வறுமையுற்றுப் போய்விடவில்லை. மரங்களை அழித்துத் தொழில் செய்யும் தச்சு வேலை செய்தவனுக்குக் காட்டில் மரங்கள் கிடைக்கும். அது போல் எத்திசையில் எந்த ஊருக்குச் சென்றாலும் சோறு கிடைக்காமல் போகாது என்பதை

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சிதன் அறியலன் கொல்* என் அறியலன் கொல்அறிவும் புகழும் உடையோர் எந்தை....................................................

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே* " 18

என்று தன் தன்மான உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

**செய்ந்நன்றி மறவாமை**

பண்டையத் தமிழர்கள் வாழ்வில் செய்ந்நன்றி மிக உயர்ந்த அறமாகக் கருதப்பட்டது. ஒருவர் தனக்குச் செய்த உதவியை எக்காலத்துக்கும் மறவாமல் அதற்குப் பதிலாகப் பிரதி உபகாரம் செய்தலையே தமிழர்கள் அடிப்படை அறமாக நெறியாகக் கொண்டிருந்தனர்.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைசெய்ந்நன்றி கொன்ற மகற்கு " 19

என்ற வள்ளுவரின் வாக்கு நன்றி மறவாமையின் உயர்வை நமக்கு உணர்த்துகிறது.

" செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம் " 20

என்ற உலகநாதர் பாடல் நன்றி மறவாத சிறப்பை உணர்த்துகிறது.

மேலும் புறநானூறு பாடல் ஒன்று எந்தத் தவறு செய்தாலும் அதற்குப் பாவ மன்னிப்புண்டு.ஆனால் செய்ந்நன்றி மறந்தவனுக்கு வாழ்வில் உய்வு இல்லை என்பதை

" ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்........................................நிலம் புடை பெயர்வது ஆயினும் ஒருவன்செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லை "21

என்ற பாடல் வரிகள் மூலம் ஆலந்தூர்கிழார் பசுவிற்குத் துன்பம் செய்தவன். தாய்மைப் பேற்றைக் கெடுத்தவன்/ பெற்றோருக்குத் துன்பம் தந்தவன்/ இவர்களுக்குப் பரிகாரம் உண்டு. ஆனால் ஊழியக்காலமே வந்தாலும் செய் நன்றி கொன்றவர்களுக்குத் தப்ப வழியில்லை என்ற கூற்றின் மூலம் நன்றி மறவாமையின் சிறப்பை அறியலாம்.

**விரும்புதல் வீர வாழ்வு**

பண்டையத் தமிழர்களின் வாழ்வில் மறம் என்கிற வீரம் மிகவும் அடிப்படையானதாக/ முதன்மையானதாகப் பிரிக்க முடியாத ஒன்றாக/ இணைந்தே வந்துள்ளதை பண்டையத் தமிழ் இலக்கியங்கள் வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. பண்டையத் தமிழர்களின் புற வாழ்வு வீரத்தையும்/ மானத்தையும் அடிப்படையாகக் கொண்டதோடு அறம்/ தியாகம்/ மானம் இவற்றையும்/ உள்ளடக்கியது.

பண்டையத் தமிழர்களின் வாழ்வில் போர்க்கள வீர வாழ்வு முக்கியமாக கருதப்பட்டது. போர் களத்தில் நேருக்கு நேர் நின்று போரிடுவதையும்/ புற முதுகிட்டு ஓடாத வீரத்தையும் தமிழர்கள் போற்றினர்/ மதித்தனர். புற முதுகிட்டு அம்பு பட்டு இறப்பதை அவமானமாகக் கருதினார். அதற்காக உயிர் துறந்தனர். வெற்றி பெற்ற வீரர்களின் தாய்மார்கள் தங்கள் மகனின் வீரம் குறித்து பெருமை கொண்டனர். வீரமுடைய தாய்மார்கள் போற்றப் பெற்றனர். இத்தகைய வீரப் பண்பாட்டினை தமிழர்கள் கொண்டிருந்ததை பண்டைய இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

வீரத்தாய் தன் மகனின் பெருமை குறித்து கூறும் பொழுது

" சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்காண்டு உளனோ என வினவுதி என் மகன்யாண்டு உளனாயினும் அறியேன்

…………………………….

தோற்றுவன் மாதோ போர்க்களத்து தானே " 22

என்ற பாடல் வழி காவற்பெண்டு என்னும் புலவர் வீரனைப் பெற்றெடுத்த வீரத்தாயின் பெருமை பேசுகிறார். உன் மகன் எங்கே எனக் கேட்டவர்களிடம் தாயானவள் எங்கே எனத் தெரியாது. ஆனால் புலியிருந்த குகை பெற்ற வயிறு இங்குள்ளது. அவன் புகழ் சிறக்கப் போர்க் களத்திற்குப் போயிருப்பான் என்று பதில் கூறுகிறாள். இதன் மூலம் பண்டையத் தமிழர்களின் வீரம் புலப்படுகிறது.

வீரத்தாயின் மகன் போரிலே புறமுதுகிட்டு இறந்து கிடக்கிறான் என்று கூற/ பெற்ற தாய் அவ்வாறு இருந்தால் பால் கொடுத்த மார்பை அறுBranch வெறிவேன் என்று கோபத்தோடு போர்க்களம் போனாள். அங்கே வீரர்களின் உடலைப் புரட்டிப் பார்க்கிறாள். ஓரிடத்தில்தன் மகன் மார்பில் விழிப்புண் பெற்று உடல் சிதைந்து கிடப்பதைக் கண்டு மகனின் வீரம் கண்டு பெற்ற நாளிலும் பெரிதும்மகிழ்கிறாள். இதனை

" நரம்புஎழுந்த உலறிய நிரம்பா மென்தோள்

…………………

………………

முலை அறுத்திடுவன் யான் எனுஞ்சின இக்

…………………

படுமகன் கிடக்கை காணூஉ ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனனே " 23

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

முதிர்ந்த தாய் தன் இளைய மகனை போருக்கு அனுப்புகிறாள். அங்கே அவன் யானைகளோடு போரிட்டு கொன்றதோடு தானும் மடிகிறான். இச்செய்தியைக் கேட்டு தன் மகன் வீர மரணம் அடைந்தான் என்று ஆனந்தக் கண்ணீர் விடும் தாயின் மகிழ்ச்சியை பூங்கண் உத்திரையார்

" கன்று அறிந்து பட்டனன் என்னும் உவகைஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்நோன்கழை தூயல் வரும் கண்ணீர்நோன்கழை தூயல் வரும் வெதிர்த்து

வான் பெயத் தூங்கிய சிதறினும் பலவே " 24என்ற வரிகள் புலப்படுத்துகிறது.

பகைவர் படைகளை வென்று ஆனிரைகளுடன் வருகின்ற படைத்தலைவனுக்கும் துணையாய் வருகின்ற வீரர்களுக்கும் விருந்து தயார் செய்து கொடுக்கும் காட்சியினை

" நெய்வும் தொடுமின் விடையும் வீழ்மின்பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்

..................

..................

உழைஞர் தன்னினும்/ பெருஞ்சாயலரே " 25

என்ற பாடல் மூலம் தேன்/ ஆட்டுக்கிடாய்/ போன்ற பல்வேறு உணவினை வழங்கியதை காண முடிகிறது.

**முடிவுரை :**

பண்டையத் தமிழர்களின் வாழ்வியலை பண்டையத்தமிழ் இலக்கியங்கள் வழி ஆய்வு செய்யும் போது பண்டையத் தமிழர்கள் சாதி பேதமில்லாத சமத்துவம் நிறைந்த எல்லோருக்கும் எல்லாமான உலகளாவிய மானுடநேய சிந்தனையைக் கொண்டவர்களாக வாழ்ந்ததைக் காண முடிகிறது. மேலும் கல்வியின் சிறப்பை அறிந்தவர்களாகவும்/ வறியோர்க்கு உதவுபவர்களாக ஈகைப் பண்பு கொண்டவர்களாகவும் மான உணர்வு கொண்டவர்களாகவும்/ செய் நன்றி மறவாதவர்களாகவும்/ வீரத்தை வாழ்வாகக் கொண்டவர்களாகவும் வாழ்ந்ததைக் காணமுடிகிறது. மேலும் பிற்கால சமுதாயம் நன்னெறியில் வாழ்வதற்கு வழிகாட்டிய இவர்களின் செம்மாந்த வாழ்க்கை நெறிகள்/ அமைந்துள்ளன என்பதற்கு பண்டைய தமிழ் இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. அ. சிவக்கண்ணன் மு.வ. நாவல்களினால் சமுதாயச் சிக்கல்கள் பக். - 7
2. திருவள்ளுவர் திருக்குறள் எளிய உரை சாரதா பதிப்பகம் பக். - 200

3 ஞா. மாணிக்க வாசகர்/ புறநானூறு (மூலமும்/ உரையும்) பக். - 268

3. மேலது பக். - 257
4. மேலது பக். - 271
5. மு. அண்ணாமலை தமிழ்நாட்டில் கல்வி அன்றும் இன்றும் பக். - 187
6. ஞா. மாணிக்க வாசகர் புறநானூறு (மூ.உ) பக். - 258
7. ந.மு. வேங்கடசாமி நாட்டார் கொன்றை வேந்தன்/ உலக நீதி மூதுரை மூலமும்/ உரையும் பக். - 76
8. நா. மாணிக்க வாசகர் புறநானூறு மூலமும் உரையும் பக். - 267
9. திருவள்ளுவர் திருக்குறள் - எளிய உரை சாரதா பதிப்பகம் பக். - 50
10. ஞா. மாணிக்க வாசகர் புறநானூறு பக். - 267

12 மேலது பக். - 286

13 மேலது பக். - 34

14 மேலது பக். - 50

11. திருவள்ளுவர் திருக்குறள் எளிய உரை சாரதா பதிப்பகம் பக். - 199

12. ஞா. மாணிக்க வாசகர் புறநானூறு (மூ.உ) பக். - 256

17 மேலது பக். - 287

13. மேலது பக். - 289

14. திருவள்ளுவர் திருக்குறள் எளிய உரை சாரதா பதிப்பகம் பக். - 27

15. ந.மு. வேங்கடசாமி நாட்டார் கொன்றை வேந்தன் உலகநீதி மூதுரை மூலமும் உரையும் பக். - 47

16. ஞா. மாணிக்க வாசகர் புறநானூறு (மூ.உ) பக். - 61

17. மேலது பக். - 132

23 மேலது பக். - 368

24 மேலது பக். - 367

25 மேலது பக். - 355

**துணை நின்ற நூல்கள்**

[1]. கருப்பூர். மு. அண்ணாமலை தமிழ்நாட்டில் கல்வி அன்றும் இன்றும் முதற் பதிப்பு - 2005அம்மன் புத்தகக் குழுமம்/சென்னை - 600 005.

[2]. யோகில் பட் ஔவையார் பாடல்களின் கருத்துக்கள் இரண்டாம் பதிப்பு 2012வெளியீடு தெய்வப்புலவர் தமிழ் இயல்பியல் ஆராய்ச்சிவளாகம்சென்னை - 41.

[3]. கீர்த்தி ஔவையார் ஆத்திச்சூடி (கொன்றை வேந்தன் மூதுரை நல்வழி உள்ளடங்கியது) பதின் மூன்றாம் பதிப்பு - 2015அருணா பதிப்பகம்சென்னை - 600 025.

[4]. அ. சிவக்கண்ணன் மு.வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள் மதுரா பதிப்பகம் மதுரை முதற்பதிப்பு 1984

[5]. திருவள்ளுவர் திருकुறள் எளிய உரை சாரத பதிப்பகம் முதற்பதிப்பு 2015கௌரா புத்தக மையம் சென்னை - 600 005.

[6]. நா. மாணிக்க வாசகன் புறநானூறு (மூலமும் - உரையும்) முதற்பதிப்பு - 1998உமா பதிப்பகம் மண்ணடி/சென்னை - 600 001.

[7]. ந.மு. வேங்கடசாமி நாட்டார்( கொன்றை வேந்தன் உலக நீதி மூதுரை )மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் பதிப்பு ஆறு சென்னை - 14.